**OS. No.  53 /2022**

P.W.1 - **ஜானகிராமன்**

தேதி:  25.09.2023

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். பால் வியாபாரம் மூலமாக மாதம் ரூ.40,000/- அல்லது 45,000/- வருமானம் வரும். இதை தவிர விவசாயத்தொழிலும் செய்து வருகிறேன். இந்த வழக்கின் பிரதிவாதி பெடரல் வங்கி மற்றும் ஐடிஎப்சி வங்கியிலும் வாங்கிய கடனை அடைப்பதற்கு தான் என்னிடம் கடன் கேட்டார் என்றால் கிரைய ஒப்பந்தத்தின் பேரில் பணம் வாங்கினார். பிரதிவாதி வங்கி கடனை பைசல் செய்வதற்காக தான் என்னிடம் கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தின் பேரில் கிரையம் செய்து தருவதாக பணம் பெற்றார். நான் ரூ.13,50,000/- 16.11.2021 அன்று டிடி எண் 452808 பிரதிவாதி வங்கியில் கட்டியதற்கான எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 18.11.2021 அன்று ரூ.9,50,000/-த்திற்கான டி டி எண் 452823 பிரதிவாதி வங்கியில் கட்டியதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 16.11.2021 மற்றும் 18.11.2021 ஆகிய தேதிகளில் பிரதிவாதி எந்த கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். வங்கியில் அடமானம் வைத்துள்ள பிரதிவாதியின் சொத்தை நான் கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளது தவறு என்றால் நான் வங்கியில் பணம் செலுத்தி எம்ஓடி ரத்து செய்த பின்பு தான் கிரைய ஒப்பந்தம் போட்டேன். மேற்படி எம்ஓடி ரத்து செய்ததை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் எனது மனைவியும் விலையுயர்ந்த பிரதிவாதியின் சொத்தை அபகரிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH